# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.13/2013

2025 -ம் ஆண்டு ஜூலை மாதம் 18 -ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.3 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு.R. சீனிவாசன், Bench Clerk(Gr-III) அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 18.07.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. முருகராஜன் (DW-3) | வயது | : | 60 /2025 |
| க/த பெயர் | : | திரு. ரங்கராஜன் | தொழில் | : | சுயதொழில் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | | மன்னார்குடி |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) அசல் வழக்கு எண்.13/2013 இவ்வழக்கினை எனது தந்தையுடன் உடன் பிறந்த சதோதரர் தங்கமணி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி கோவிந்தராஜ் என் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். கோவிந்தராஜ் என்பவருக்கு டவுன் சர்வே எண்.3721 ல் 4420 சதுரடி இடத்தை வாதி எழுதி கொடுத்ததாக எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) எனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கானது அசல் வழக்கு எண்.133/2018 வழக்கானது வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டு எனது தரப்பில் சாட்சி விசாரிக்கவிலலை என்றால் சரிதான். அசல் வழக்கு எண்.133/2018 ல் 4745 சதுரடி வாதியான தங்கமணி எனக்கு எழுதி கொடுத்ததாக கட்சி செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த நிகழ்ச்சிக்கு முன்பு எங்களுக்குள் கிரய உடன்படிக்கை ஏற்பட்டதாக எனது எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரய உடன்படிக்கை யார் யாருக்கு எழுதிக் கொண்டார்கள் என்றால் தங்கமணிக்கும், எனக்கும் எனது சகோதரர் கோவிந்தராஜ், எனது தந்தை ரங்கராஜனுக்கும் இடையே ஏற்பட்டது.

3) அந்த கிரய உடன்படிக்கையில் எவ்வளவு விஸ்தீரணத்துக்கு எழுதப்பட்டது என்றால் 20000 சதுரடிக்கு எழுதப்பட்டது. கிரய உடன்படிக்கை எழுதப்பட்டதற்கு முன்பு அதே இடத்தில் வாதி தங்கமணி மனைவி தையல்நாயகி மூன்றடுக்கு கல்யாண மண்டபம் கட்டப்பட்டிருந்தது என்றால் சரிதான். அந்த கட்டிடத்திற்கு தென்புறம் உள்ள பகுதிக்கு தான் கிரய உடன்படிக்கை எழுதப்பட்டதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஒரு கிரய உடன்படிக்கை எழுதும்போது சொத்தானது நீள, அகலம் மற்றும் சொத்தின் விஸ்தீரணம் அந்த சொத்திலுள்ள விபரங்கள் அனைத்தும் குறிப்பிட்டு எழுதுவார்கள் என்றால் சரிதான். அதன் அடிப்படையில்தான் கிரய உடன்படிக்கை எழுதப்பட்டதா என்றால் ஆமாம்.

4) கிரய உடன்படிக்கை எழுதுவதற்கு முன்பு அந்த இடத்தில் உரிய அளவு விஸ்தீரணமும் அவரது பெயரில் உள்ளதா என்பது குறித்து சரிபார்த்த பின்னர் தான் வாங்க வேண்டும் என்பதால் அது குறித்து நாங்கள் அந்த சொத்திலுள்ள விபரங்களை சரி பார்த்தோமா என்றால் தங்கமணி எனது சித்தப்பா என்பதால் அவர் சொல்லியதன் பேரில் எழுதிக்கொண்டோம்.

5) எனது தகப்பனாருக்கு எதிராக அசல் வழக்கு எண். 132/2018 ல் 4190 சதுரடியை தங்கமணி எனது அப்பாவிற்கு விற்பனை செய்ததாக எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாயார் மலர்கொடிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண். 131/2018 ல் 3875 சதுரடிகை தங்கமணி, எனது சித்திக்கு விற்பனை செய்ததாக எதிர்வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) எங்களுக்கும் தங்கமணிக்கும் இடையே உடன்படிக்கை ஏற்பட்டிருந்தால் அந்த இடத்தின் விஸ்தீரணம் அனைத்தும் அளந்து சரிபார்த்த பின்னர் தான் உடன்படிக்கை ஏற்படுத்தியிருப்போம், அப்படி உடன்படிக்கை தங்கமணியுடன் ஏற்படாததால் தான் அந்த இடத்தின் விஸ்தீரணம் அனைத்தும் தவறுதலாகவும், மோசடியாகவும் எங்களால் எழுதப்பட்டது என்றால் சரியல்ல.

7) தங்கமணி மனைவி தையல்நாயகி மண்டபத்திற்கு தென்புறம் பூமியில் 20000 சதுரடி விஸ்தீணரம் இல்லை என்றால் சரிதான். பூமியில் 20000 சதுரடி குறைவாக இருப்பது குறித்து தங்கமணிக்கு சட்ட அறிவிப்பு ஏதேனும் அனுப்பினோமா என்றால் இல்லை, 17250 சதுரடி இருந்தது.

8) எனக்கும் தங்கமணிக்கும் ஏற்பட்டதாக சொல்லும் கிரய சாசனத்தில் 4745 சதுரடி, மலர்கொடிக்கு 3875 சதுரடி, ரங்கராஜனுக்கு 4190 சதுரடி, கோவிந்தராஜனுக்கு 4420 சதுரடி ஆக மொத்தம் விஸ்தீரணம் 17230 சதுரடி என்றால் சரிதான்.

9) பொதுவாக தமிழ்நாடு தொழில் முதலீட்டு கழகத்திற்கு அடமானம் வைத்த சொத்தினை விற்பனை செய்ய யாருக்கும் உரிமையில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. இந்த சொத்து சம்பந்தமாக மன்னார்குடி சார்பதிவாளர் அலுவலகத்தில் தங்கமணி கிரய சாசனம் எழுதி தர வேண்டும் என மனு கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த ஆவணத்தை சார்பதிவாளர் பரிசீலனை செய்து இந்த ஆவணம் முடிவுறா ஆவணம் என்பதால் பரிசீலனை செய்ய முடியாது என்று சொல்லி கிரய சாசனம் எழுதவில்லை என்றால் சரிதான்.

10) முடிவுறா ஆவணம் என்பது விற்பனை செய்பவர் கிரய ஆவணத்தில் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் இடவேண்டும், அவ்வாறு கையொப்பம் இல்லாத ஆவணம் முடிவுறா ஆவணமாக கருதப்படும் என்றால் சரிதான். அதேபோல நாங்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்த கிரய சாசனமானது முடிவுறா ஆவணமென கருதி எங்களிடம் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்திலுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும் என்பதால் தங்கமணி கையொப்பம் நாங்களே போட்டு நாகப்பட்டிணம் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் கொடுத்து கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன்பேரில் மாவட்ட பதிவாளர் அலுவலகத்திலிருந்து அறிவிப்பு கிடைத்து தங்கமணி மாவட்ட பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று அதிலுள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்று மறுத்து தடய அறிவியல் துறைக்கு அனுப்பி ஒப்பீடு செய்ய வேண்டுமென மனு கொடுத்தார் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

11) உண்மை தன்மையை விசாரிக்க தடய அறிவியல் துறைக்கு அனுப்பி ஒப்பீடு செய்ய வேண்டுமென மனு கொடுத்தார் என்று எதிர் வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். கையொப்பத்தை தடவியல் துறையில் ஒப்பீடு செய்ய எங்களுக்கு

ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். அந்த சூழ்நிலையில் மாவட்ட பதிவாளர் கிரய சாசனம் செய்ய வேண்டுமென சார்பதிவாளர் அலுவலகத்தில் உத்தரவிட்டது தவறானது என்றால் சரியல்ல. மாவட்ட பதிவாளர் உத்தரவின் பேரில் சார்பதிவாளர் கிரய சாசனம் செய்தார் என்றால் சரிதான்.

12) சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரய சாசனம் எழுதப்பட்ட விபரத்தை கேவிட் மூலமாக வாதி தங்கமணிக்கு தெரியப்படுத்தியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த கேவிட் மனுவை தங்கமணி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. கிரயம் வாங்கிய சொத்துக்களை எங்கள் குடும்பத்தில் சப் டிவிசன் செய்து கொண்டோமா என்றால் இல்லை.

13) கிரய சாசனம் ஏற்பட்டதும் அந்தந்த நபர்களுக்கு தனிப்பட்டா வாங்கிக்கொண்டோமா என்றால் இல்லை. நான் கிரயம் வாங்கிய இடத்தில் எடை மிசின் கட்டிடம் கட்டியதாக பி.சா.ஆ.9 சொத்து வரி ரசீது தாக்கல் செய்துள்ளதால், அந்த கட்டிடம் உள்ள இடமானது மன்னார்குடி நகராட்சிக்கு உட்பட்ட இடம் என்பதால் ஆணையரின் கட்டிடம் கட்டும் அனுமதி கொடுத்துதான் கட்டிடம் கட்டப்பட்டது என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

14) ஒரு ஆவணத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதால் பி.சா.ஆ.7 முதல் பி.சா.ஆ.9 வரை உள்ள ஆவணங்களை மோசடியாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மன்னார்குடி நகராட்சியில் என்னுடைய சொத்து என்பதை சப் டிவிசன் செய்தால்தான் அந்த சொத்து அடையாளம் காணப்பட்டு அதில் கட்டிடம் கட்ட அனுமதி கொடுப்பார்கள், அவ்வாறு சப் டிவிசன் செய்யாததால் நான் சொல்வது போல் கட்டிடம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்றால் சரியல்ல.

15) என்னுடைய சொத்தை ஸ்ரீராம் சிட்ஸ் கம்பெனிக்கு அடமானம் வைத்துள்ளதால் அந்த பத்திரத்தில் அந்த சொத்து வே-பிரிட்ஜ், ஆர்.சி.சி கட்டிடம் இருக்கும் விபரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வே-பிரிட்ஜ் கட்டிடம் இருப்பதாக சொல்லியுள்ளதால் ஜி.எஸ்.டி கட்ட வேண்டும், ஜி.எஸ்.டி கட்டியதற்கான ஆவணம் உள்ளதா என்றால் இதற்கு ஜி.எஸ்.டி வராது.

16) இந்த வழக்கு விசாரணைக்கு 2011 ல் வாதியால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் ஆட்சேபணை செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால்

கோப்பிற்கு எடுக்காமல் வழக்குரை நிராகரிக்கப்பட்டதால் மேல்முறையீடாக சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

17) பி.சா.ஆ.7 முதல் பி.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல. எனது சகோதரர் கோவிந்தராஜ் மிகப்பெரிய கட்டிடம் கட்டும் ஒப்பந்ததாரர் என்பதால் நகாராட்சிக்கும் கோவிந்தராஜ்க்கும் இடையே நெருங்கிய நட்பின் காரணமாக வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் செல்வாக்கின் மூலம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும் பி.சா.ஆ.7 முதல் பி.சா.ஆ.10 வரையிலான ஆவணங்களுக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2025.07.21 12:00:41 +0530

District Munsif

Mannargudi.